# தமிழுக்கு அமுதென்று பேர்

## தமிழுக்கு வாழ்வதே வாழ்வு

தமிழே உனக்கு வணக்கம்
தாயுன் புகழ்இந்த உலகில் மணக்கும்
தமிழே உனக்கு வணக்கம்.

இமை நேரமும் உனைமறக்க மாட்டோம்!
எம்கடன் ஆற்றாமல் இறக்க மாட்டோம்
அமுதத் தமிழைத் துறக்க மாட்டோம்
அடிமையை ஒப்பினால் சிறக்க மாட்டோம்.
தமிழே உனக்கு வணக்கம்.

உனக்கு வந்தநலம் எமக்கு வந்ததாகும்
உனக்கு வந்தவெற்றி எமக்கு வந்ததாகும்
தனக்கென வாழ்ந்தது சாவுக் கொப்பாகும்
தமிழுக்கு வாழ்வதே வாழ்வ தாகும்!
தமிழே உனக்கு வணக்கம்,

## எது என் ஆசை

அதுதான் என் ஆசை—தமிழ்
அன்னை அவள் முன்னைபோலத்
தன்னைத்தானே ஆளவேண்டும். (அதுதான்)

இதுதான் அவள் நிலையா?—அவள்
எல்லாம் பெற்றிலையா?—இனிப்
புதுவாழ்வுறல் மலையா?—அவள்
போரில் நின்று பாரில் இன்று
நேர்நிமிர்ந்து வாழவேண்டும். (அதுதான்)

அடிமை யுற்ற துண்டா?—அவள்
அயலவனின் பெண்டா?—இம்
மிடிமை நிலை பண்டா?—அவள்
வெற்றிக் கொடி பற்றிப் பகை
எற்றுப் புகழ் மேவ வேண்டும். (அதுதான்)

ஆரியம் போல் முடமா?—தமிழ்
அன்னை கலப்படமா?—வேற்
றூர்தான் பிறப்பிடமா?—பதை
ஒழித்தே இடர்அழித்தே நலம்
கொழித்தே புகழ் ஓங்க வேண்டும். (அதுதான்)

இடையில் வந்த வாழ்வா?—அவள்
ஏற்ப திந்தச் சூழ்வா?—தமிழ்
நடையி லென்ன தாழ்வா—தமிழ்
நாடு நல்ல வீடு, மிகு
பீடு பெற்று வாழவேண்டும்! (அதுதான்)

## தமிழர்க்கு அழைப்பு

தமிழரெல்லாம் தமிழரையே சார்தல் வேண்டும்
தமிழரல்லார் தமைச்சார்தல் தீமை செய்யும்!
தமிழர்க்குத் தமிழர்தாம் இடர்செய் தாலும்
தமிழர்பொது நலமெண்ணிப் பொறுக்க வேண்டும்
தமிழரெல்லாம் தமிழரன்றோ! தமிழர் அல்லார்
தமிழரல்லார் என்பதிலும் ஐய முண்டோ?
தமிழர்க்குத் தமிழரல்லார் இதுவ ரைக்கும்
தமைமறந்தும் ஒரு நன்மை நினைத்த துண்டோ?

தமிழனொரு தமிழனுக்குத் தீமை செய்தால்
தனிமுறையிற் செய்ததென அதைம றந்து
தமிழரது பொதுநலத்துக் குயிரும் தந்து
தமிழரது பண்பை நிலைநிறுத்த வேண்டும்,
தமிழனுக்குத் தனிமுறையில் செய்த தீமை
தமிழர்க்குச் செய்ததென நினைத்தல் நன்றா?
தமிழரெலாம் ஒன்றுபடந் தக்க நேரம்,
தமிழரிதை மறப்பாரேல் இனமே சாரும்?

தமிழரெல்லாம் தமிழருக்குத் துணையாய் நிற்க,
தமிழ் கொன்று தமிழினத்தை ஈடழிக்கத்
தமிழரல்லார் மூச்சுவிடா துழைக்குன்றார்கள்,
தமிழருக்குத் தலைவரெனச் சொல்வார் தாமும்;
தமிழ்மாய்க்கக் காசுபெறத் துடிக்கின்றார்கள்.
தமிழ்மாய்க்கக் கூலிதரச் சிலரும் உள்ளார்,
தமிழ்கொல்லும் தலைவர்களைச் சாணும் தீய
தலைமுறையும் இதுவாகும் ஒன்று சேர்க!

## இனப் பண்பாடு
## மனப் பண்பாடாதல் வேண்டும்

தாங்கள் தமிழரே என்று பார்ப்பனர்
கழறலாம் அதிலே கவமை இல்லை:
தமிழர் தம்மைப் பார்ப்பனர் என்று
பகரலாம் அதற்குப் பதற மாட்டோம்!

சிங்களம் சென்ற தமிழன் சிங்களச்
செங்க ரும்பைச் சேர்த்து நாலைந்து
பிள்ளைக் குட்டிகள் பெற்றுத் தென்னாட்
டெல்லையில் மகிழ்வுடன் வாழ்ந்தி ருக்கலாம்.
பாரிசில் பிறந்த பச்சைக் கிளியைத்
தமிழன் உயிரில் தாங்கி வந்து

மக்களொடு மக்களாய் வாழ்ந்தி ருக்கலாம்
ஊன்றி நோக்கத் தக்க தொன்றே:

தமிழ்மொழி நன்றே தழைக்க வேண்டும்
தமிழ் அமிழ்து சாற்றிய முறைப்படி
தமிழன் உரிமையொடு வாழ வேண்டும்''
என்றஓர் அழியா இனப்பண் பாடு
மனப்பண் பாடாம்எனின்
தனித்தசீர்த் தமிழரே அவர்தமிழ் அகத்தாரே!

## தமிழ் விடுதலை ஆகட்டும்

சலுகை போனால் போகட்டும்—என்
அலுவல் போனால் போகட்டும்
தலைமுறைஒரு கோடி கண்ட என்
தமிழ் விடுதலை ஆகட்டும். (சலுகை)

பிள்ளைபி றந்தேன் யாருக்காக?
பெற்றதமிழ் மொழிப் போருக்காக!
உள்ளம் இருப்பதும் தோள் இருப்பதும்
உயிர்நிகர் தமிழ்ச் சீருக்காக! (சலுகை)

போனால் என்னுயிர் போகட்டும்—என்
புகழுடல் நிலை ஆகட்டும்!
தேனால் செய்தஎன் செந்தமிழ்தான்
திக்கெட்டுமே தொழ நிற்கட்டும்! (சலுகை)

## தொண்டர் படைப்பாட்டு

வாரீர் தொண்டர் படைக்கெல்லோரும்—விரைந்துசேர
வாரீர் தொண்டர் படைக்கெல்லோரும்
பாரீர் நமது தமிழ்க் கன்னல்—உயிர்ப்பயிரை
வேரோடு சாய்க்க வரும் இன்னல்—களைந்தெறிய (வா)

சீரோடி ருந்தத் தமிழ்நாடு—தத்தருளிய
செம்மைப் புலவர் தந்த ஏடு—பலப்பலவும்
பேரே இலா தொழித்த தோடு—நமதொழுக்கம்
பேணா தகற்றிவிட்ட கேடு—பொறுத்ததினால் (வா)

பாரோர் புகழ் தமிழ்ப் பண்பாடு—தனையழிக்கப்
பார்க்கும் பகையின் நரிக்காடு—தனை எதிர்க்க
ஊரார் தம்வீட்டுக்கு வீடு—சிறுத்தை நிகர்
ஒன்றைத் தமிழர் விழுக்காடு—வெளியில் வந்து
போராடுவோம் மகிழ்ந்து தேரோடியே விரைந்து (வா)

## பெரியார் இயக்கம் வாழ்க
## நரியார் கூட்டம் ஒழிக!

தமிழகம் மீள வேண்டும்
    தமிழர்கள் வாழ வேண்டும்
அமிழ்தான இக்கொள் கைக்கே
    அருந்தொண்டு செய்பவர் போல்
தமைக்காட்டிக் கொண்டே சில்லோர்
    தமதுடல் வளர்க்கின் றார்கள்
இமைப்பினில் இவர்கள் எல்லாம்
    ஒழிந்தால்தான் இயக்கம் வாழும்!

மக்களை மீட்க நல்ல
    மனம் மொழி மெய்கள் வேண்டும்;
இக்கொள்கைக் கான தொண்டே
    எந்நாளும் செய்ப வர்போல்
பொய்க்கோலம் காட்டிச் சில்லோர்
    பொதுப்பணம் கருதுகின்றார்.
கைக்கூலிகள் தொடர்பு
    கழன்றால்தான் இயக்கம் வாழும்!

ஆண்டாண்டு தோறும் மக்கள்
    ஆரியம் தனில்ஆழ்கின் றார்
மீண்டாலே தமிழர் மீள்வார்
    எனுமிந்த மேன்மைக் கொள்கை
பூண்டார்போல் காட்டித் தங்கள்
    புதுக்கட்சி வளர்க்கும் புல்லர்
வேண்டாத பெரியார் காலை
    விட்டால்தான் இயக்கம் வாழும்.

தன்னலம் நீக்கி இன்பத்
    தமிழக நலமே காக்க
எனுமிக் கொள்கைக்காக
    என்றுதொண் டாற்றுவார்போல்,
மின்னிடும் வெண்பொற் காசு
    நடிகர்பால் மின்னக் கண்டால்
அன்னானின் அடிவீழ்வார்கள்
    அகன்றால்தான் இயக்கம் வாழும்!

அழியாத பார்ப்புக் கோட்டை
    அழித்திட வேண்டுமென்ற
பழியாத கொள்கைக் காக
    உழைப்பதாய்ப் பசப்பிச் சில்லோர்
செழியாதார் செழிப்பார் என்று
    சிபாரிசால் சுரண்டு வார்கள்.

அழையாதார் வீட்டில் உண்போன்
அகன்றால்தான் இயக்கம் வாழும்!

பகலென்றும் இரவே என்றும்
பாராது மக்கள் தம்மை
அகலாது செய்வ தாமோர்
அன்புத்தொண் டியற்று வார்போல்
மிகக் காட்டிப் பெரியார் தம்மை
வெருட்டவும் கனவு காண்பார்
வகைகெட்டார் நாண மில்லார்
ஒழிந்தால்தான் இயக்கம் வாழும்.

அவன் போனான் இவனும்—போனான்
அடுத்தொரு குள்ளன் போனான்
எவன்போனான் எனினும் நாட்டில்
இருக்கின்றார் பெரியார் என்றால்
குவிந்தது தமிழர் கூட்டம்
குலைந்தது பார்ப்பான் ஓட்டம்;
நவிலும் இந்நிலையில் தீய
நரிக்கூட்டம் ஒழிதல் நன்றே!

தானின்றேல் தலையே இல்லை
என்றுபேன் சாற்றி னாற்போல்
நானில்லை எனில் இயக்கம்
நடக்காதென் றானாம் ஓர்ஆள்!
ஏன்என்று கேட்ட தற்கு
யான் உழைப்பவன்என் றானாம்.
பூனை,கண் மூடிக் கொண்டால்
உலகமா இருண்டு போகும்?

உழைப்புக்குக் கூலி யாகப்
பெரியாரை ஒழிப்ப துண்டோ?
பிழைப்புக்கு வழிசெய் தாரே
திருமணம் பெறச்செய் தாரே
தழைப்பித்த நிலத்தைப் பைங்கூழ்
தாக்கவா முடியும்? அன்னோன்
கொழுப்பினை அடக்கு தற்குப்
பெரியார்க்குக் கோலா வேண்டும்?

பெரியாரின் பேர் ஒழிக்க
முதல் முழக்கம்செய் தோன்யார்?
தெரியாதா? அந்த ஆளே
திருத்தொண்டு செய்தோன் என்றும்
பிரியாமல் இருந்தேன் என்றும்
பேசிஆள் சேர்க்கின் றானாம்
புரியாத இருளில் உள்ளாள்
விடிந்தபின் புரிந்து கொள்வான்!

பொன்னை கயில் இருந்த துண்டா?
புகழ்தானும் இருந்த துண்டா?
தன்கையை ஊன்றித் தானே
எழுந்திடும் தகுதி உண்டா?
முன்கைதந் தருளி னாரின்
முழுதுடல் வெட்ட எண்ணும்
புன்தொழில் உடையான் ஓடிப்
போனால்தான் இயக்கம் வாழும்!

மிகுதியாய்த் தீமை செய்தோர்
தில்லியார்! பெரியார்க் குள்ள
தகுதியால் தமிழ கத்தைச்
சாகுமுன் மீட்க வேண்டும்
புகுந்தது தமிழ்ப்பட் டாளம்
போர்ப்படைத் தலைவர் தம்மை
இகழ்தலும் கவிழ்க்கும் வஞ்சம்
இழைத்தலும் செய்வோன் யாவன்?

## அன்னை திருமுடி வாழ்க!

அறத்தை வடவன்செய்யும் படுகொலை—தெற்கில்
அனைவர்க்கும் ஏற்பட்ட விடுதலை
திறத்தை உடையவன் அல்லன் வடக்கன்—தெற்கின்
சிக்கலால் கொழுத்தான் அவ்விடக்கன்

புறத்தைச் சாதிச் சேற்றினால் மூடித்—தமிழர்
புலத்தைக் கெடுத்தானப் பேடி—
பறக்க வேண்டும் பார்ப்பனன் சூழ்ச்சி—கடிது
படைக்க வேண்டும் தமிழர் ஆட்சி

அன்னை கண்ணீர் நம்மவர் உணர்ச்சி—நம்மில்
ஆருக்கில்லை போர் முயற்சி?
சின்னமனிதர் தமிழர்போல் நடிப்பினும்—பார்ப்புச்
செம்பாம்பு கூடிக் கடிப்பினும்

தென்னவன் ஒருவன் உள்ளவரைக்கும்—தோள்கள்
தீய ஆட்சியை எரிக்கும்?
மன்னி உயர்க அன்னை மணிக்கொடி—வாழிய
வாழிய அன்னை திருமுடி!

## வெளியேறு

இன்று காணும் தென்பெருங்கடல்
முன்னாள் முதற்றமிழ்க் கழகம் இருந்த

குமரி நாடு ! இன்னும் கூறுவேன்
இந்நாள் ஆரியர் இருக்கும் நாடு
முன்னாள் தமிழ்கமழ் முல்லைக் காடு !

தெலுங்கு கன்னடம் கேரளம் வங்கம்
எனும்பெயர் உடையவை எல்லாம் தமிழகமே !
கொடுங்கடல் கொண்ட குமரி தொடங்கி
பனிவரை வரைக்கும் பரந்த தமிழகம்
உமதெனில் நாட்டில் உமக்குள உரிமையும்
உமக்குள பொறுப்பும் ஒருவர்க்கும் இல்லை.

உணர்வினால் உம்மை நோக்குக நீவிர்
மாடோட்டி வந்த நாடோடிகளா ?
ஒருகுடிக் குரிய வாழ்வின் உட்புகுந்து
கலகம் விளைத்துப் பிழைக்கும் கயவரா ?
இல்லை, இல்லை இம்மியும் இல்லை !
" என்கீழ் தமிழகம் இருக்க வேண்டும் "
என்னும் கீழ்மகன் தன்னை; அவனின்
காலடி நத்தும் கடையனோடு
வெளியேறு நாட்டைவிட் டென்று
பளீர் என்று சொல்லுவீர் பச்சைத்தமிழரே !

## குயில்

திருமிகு தமிழகத் தலைநகர் ஆன
சென்னையிற் பன்னூறு கவிஞர் சேர்ந்த
அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்
றத்தின் சார்பில் முத்தமிழ்ப் புத்தமிழ்து
பாடுங் குயில்! இது பதினைந்து நாள்கள்
தேடுவார் அடையும் தேடருஞ் செல்வம்.

கலகக் கட்சிகளில் தலையிடாது
வலியவரும் சண்டையையும் விடாது;
குயிலின் கொள்கையும் குயிலை உடைய
பெருமன் றத்தின் கொள்கையும் இதுவே.
மதங்களில் எதிலும் பற்று வைத்தலும்,
சாதியை நினைத்தலும் குயிலேடு தவிர்க்கும்.

அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் அனைவரும்
ஒற்றுமை எய்தும் வண்ணம் உழைக்கும்
ஒருகவி ஞன்தான் பெற்ற உயர்வு
கவிஞர் அனைவரும் அடைந்த தாக
எண்ணுமோர் பண்பாடு வளர்க்க இளைக்காது.

பெருமன் றத்துக் கவிஞர்பால் பெற்ற
கவிதை அனைத்தையும் கவின்பெரு நூலாய்த்
தொகுக்கவும், தொகுத்ததை ஆங்கிலம் ஆக்கி
உலகுக்குத் தந்து தமிழகப் பெரும்புகழ்
நிலைபெறு வித்தலும் தலையான எண்ணம்.
குயில் தமிழுக்குக் கூடிய மட்டில்
அயரா துழைக்கும்; ஐயமில்லை.
தமிழைக் காக்கவும் தமிழ்ப்பா வாணர்
அமைவினை ஆயவும் அரசினர் அமைக்கும்
நிறுவனம் பலவும் நேரிய முறையில்
நிகழும் வண்ணம் நினைவு படுத்துவது
குயிலின், குயில் நிறுவனத்தின் மூச்சு.

தமிழ்ப் பேரறிஞரும் தமிழ்ப்பெருங் கவிஞரும்
பெறத்தகும் பயனைப் பெறவொட்டாமல்
இடையில் ஒருசிலர் எழுப்பி வருவதோர்
இருப்புச் சுவரை இடிக்க வந்த குயில்.

பெருமன்றத்தின் பெருந்தொகைக் கவிஞர்
வரைவன குயிலில் வரும், அவர் படம்வரும்,
அவர் வரலாறும் அழகுற வெளிவரும்.

மன்றம் வளர்க்கும் அக்குயில் அப்பெரு
மன்ற உறுப்பினர் வளர்ப்ப தாகும்.
ஒரு குயில் வாங்கலும், ஐந்து குயில் வாங்கச்
செய்தலும் மன்ற உறுப்பினர் செயலாம்.
அயலவர் விற்பனை உரிமை அற்றவர்
அன்றியும் அன்புக் குயில் ஆசிரியரும்
ஆயிரங் கவிஞர் என்ப தறிக.

மன்ற உறுப்பினர் மணிக்குயில் உறுப்பினர்
மன்றம் உடையார் மணிக்குயில் உடையார்.
அவர்கட் கென்றன் அன்பு வேண்டுகோள்;
பழந்தமிழ் நாட்டினர் கவிதையைப் படிக்கும்
வழக்கம் அடைய உழைத்தல் முதற்கடன்.
அனைத்துலகத்தமிழ்க் கவிஞர் மன்றத்தில்
சேரா திருப்பவர் சேருமாறு செய்க
அடங்கல் உலகினும் குயிலை அனுப்புக;
கட்சிகள் மதங்கள் சாதிகள் என்னும்
முட்களில் மணிக்குயில் முட்டா ததலால்
எல்லாரும் உண்ணும் இன்ப உணவெனச்

சொல்லிக் குயிலைத் துறைதொறும் உயர்த்துக.
அலுவலில் உள்ளவர் ஆதரிக்கலாம்.
இலகு மாணவர் இதை ஆதரிக்கலாம்
மகளிர் இதனை மகிழ்ச்சி யோடும்
ஆதரிக்கலாம்! அறஞ் செய்ய மறுப்பா?

செந்தமிழ்ப் புலவர்க்குச் சொல்ல தொன்று
குயிலுக்கு நீவிர் கொடுக்கும் ஆதரவு
துயிலுவார்க் களிக்கும் தூய ஆதரவு
அருளைச் செய்க, குயிலுக்கு அன்னது
இருளை நீக்கும் இன் தமிழ் நாட்டில்!
தமிழை எதிர்க்கும் தலைவர், சழக்கர்
பெருகுமிவ் வேளையிற் பேராசிரியர்
திருமுகம் திருப்பினால் பகைமுகம் என் ஆம்?
தொன்மைக்குத் தொன்மையிற் றேன்றிய தொல்குடி
அன்புத் தமிழரே ஆதரிக்க
தமிழே வாழ்க! இன்பத்
தமிழகம் பகையை ஒழித்துத் தழைகவே.

## தமிழ் இன்றியமையாதது

உணவால் உயிர் நிலைக்கும்; அந்த உயிரும்
அணிதமிழால் ஆதும்; அதனால்,—பணிமொழியே!
செந்தமிழைத் தீர்ப்பாரைத் தீர்த்தல் முதல்வேலை!
சிந்தட்டும் செங்குருதி ஆறு.

வீரர் மரபில் விளைந்த மணிவிளக்கே!
பாரில் ஒரு மொழியைப் பாழாக்கிச்—சீரின்றித்
தம்மொழியை மேலாக்கும்
தக்கைகளும் வாழ்ந்ததுண்டோ?
இம்மா நிலத்தில் இயம்பு.

## மனிதனும் தாய்மொழியும் பிரிக்க முடியாதவை

செத்தமிழும் உடல் உயிரும் சேர்ந்தபொருள் 'தமிழன்
எந்தப்படி அவ்வுருப்படி எவன்பிரிப்பான் செப்படி?
சொந்தஉயிர் சொந்தவுடல் சொந்த மொழி மூன்றும்
வந்தபடி நிலைக்குமடி வழியிற் பிரிவதில்லை!
மக்களிடம் தாய்மொழிதான் மாய்ந்த நிலை' சாவாம்,
எக்கொடியனால் முடியும் ஒன்றை இரண் டாக்கல்?
தக்கபே ருலகினிலே தாய் மொழியை மாற்றத்
தக்கபே ராற்றலினை அடைந்தவனும் உண்டோ?

## தமிழர் வாழ்க

தமிழ்மொழியைத் தாய் என்னும் தமிழர் வாழ்கவே!
தமிழ் மொழிக்குத் தாழ்வுரைக்கும் தக்கை வீழ்கவே.

தமிழ்வாழத் தாம் வாழும் தமிழர் வாழ்கவே!
தமிழ்வீழத் தாம் தாழும் சழக்கர் வீழ்கவே.

அமிழ்தென்று தமிழுண்ணும் அன்பர் வாழ்கவே!
அமிழ்திருக்க நஞ்சுண்ணும் அடியர் வீழ்கவே
நமதென்று தமிழ்போற்றும் நல்லர் வாழ்கவே!
நமைவிற்கப் பிறரை நத்தும் நாய்கள் வீழ்கவே.

எல்லாம் உண்டு தமிழிலென்பார் எவரும் வாழ்கவே!
செல்வம் எண்ணிப் பிறரை நத்தும் தீயர் வீழ்கவே.
பொல்லாங்கற்ற தமிழ்வல்ல புலவர் வாழ்கவே!
எல்லாங் கற்றும் தமிழறியா இழிஞர் வீழ்கவே,

வேலும் வாளும் 'தமிழ்' என்னும் வீரர் வாழ்கவே!
கூலிக்காகத் தமிழை ஏசும் கொடியர் வீழ்கவே.
மேலாகும் தமிழ் என்னும் வீரர் வாழ்கவே!
கால்வீழ்ந்தும் தமிழ்விற்கும் கடையர் வீழ்கவே.

மீட்சிக்குத் தமிழ் காக்கும் வீரர் வாழ்கவே!
ஆட்சிக்குத் தமிழ்விற்கும் அடியர் வீழ்கவே!
சூழ்ச்சிக்கும் மயங்காத தூயர் வாழ்கவே!
வீழ்ச்சிக்கு வழிகோலும் வீணர் வீழ்கவே!

## தமிழைக் கெடுப்பவர் கேடு

தமிழைக் கொண்டே தமிழகம் ஆனது
தமிழகத் தமிழர் தலைவர் தாமும்
தமிழ்நா டென்று சாற்றவும் மறுத்தனர்.

தமிழால் தமிழர் ஆயினர், அன்னவர்;
தமிழை ஒழிக்கவும் தளரா துழைத்தனர்.
தமிழால் தமிழர்க்குத் தலைவர் ஆயினர்;
தமிழால் தலைமை அடைந்த அவர்கள்,
தமிழில் ஏதுளது என்று சாற்றுவர்.

தமிழைப் பேசித் தலைவர் ஆயினர்
தமிழை எழுதித் தலைவர் ஆயினர்
தமிழாற் பயன் ஏது என்று சாற்றினர்.

தமிழர் வாழத் தக்கவை ஆன
எல்லாக் கருத்தையும் இயம்பி வந்தனர்;
எல்லா உண்மையும் எடுத்துக் காட்டினர்;
அரை நூற்றாண்டாய் அறிவு புகட்டினர்.

அந்த அருமைத் தலைவரே இந்நாள்

ஆங்கிலம் தாயாய் அமைக என்றும்
தமிழால் உருப்படோம் என்றும் சாற்றினர்.

தமிழர் தலைவர் தமிழாற் பேசியும்
தமிழால் எழுதியும் தந்த கருத்தினைத்
தமிழர் தங்குதடை இன்றி உணர்ந்தனர்;
உணர்ந்துதாம் நன்னிலை உற்றனர் என்க,
இதனைத் தலைவரும் ஏற்றுக் கொள்வர்!
அன்றியும், அருமைத் தமிழே அன்றி
வேறு மொழி எமக்கு வராதென விளம்புவர்.
தமிழே தலைவர் ஆக்கியது, மற்றும்
தமிழே புகழ்பெறச் செய்ததென்பதை
எவரும் மறுக்க இயலா தன்றோ?

இப்படிப் பட்ட தலைவர் என்பவர்
தமிழில் இலக்கியம் இல்லை என்றனர்.
தலைவரைச் செய்தது தமிழிலக் கியமே!
தமிழினம் படைத்தது தமிழிலக்கியமே!
தமிழைத் திறம்படப் பேசவும் எழுதவும்
வைத்தது யாது? வண்டமிழ் இலக்கியம்!

தமிழிலக்கியம், தமிழிலக் கணத்தை
உண்டு பண்ண உதவவில்லை
என்று தமிழர் தலைவர் சாற்றுவர்;
அதே நேரத்தில் அந்தத் தலைவர்
முப்ப தாண்டாய் முளைத்த இலக்கியம்
எத்தனை ஆயிரம் என்பதை அறியார்.

## தமிழன்னை விழிக்க

துயர்க்கடலில் தத்தளிக்கும்
    தமிழ்த்தாயே சின்ன
துரும்பினையும் பெரும்புனையாய்த்
    தாவுகின்றாய்! மோதும்
புயற்கிடையில் சுழலுகின்ற
    தமிழ்த்தாயே! மண்ணிற்
புழுவினையும் விழுதென்று
    பற்றுகின்றாய்! சற்றும்

வெயிற்கிடையிற் துடிக்கின்றாய்
    தமிழ்த்தாயே! புன்னீர்

வீழ்ச்சியை நீர் வீழ்ச்சி என்று
விரைகின்றாய்! இந்நாள்
உயர்ச்சி இலா மக்கள் சிலர்
நடத்தையினைச் சொல்வேன்
உடல்நடுங்கிக் கண்ணீரால்
கடலைத்தூர்க் காதே.

ஊனக்கண் இரண்டிருந்தும்
ஒருணர்ணவும் இல்லா
உன்மக்கள் கல்விபெற
ஒருசெப்பு காசே
தானம் செய்தானை மிகப்
போற்றுவதே நல்ல
தமிழ்மகனின் பெருங்கடமை
அல்லவா அம்மா

வானத்தின் மாசகல
வந்த நிலாப் போல்வான்;
மக்கள் மன மாசகற்றப்
பலஇலக்கம் தந்த
மானத்தான்; நின்மைந்தன்;
சிவாசிகணேசன் மேல்
மண்ணள்ளிப் போட்டிடவும்
எண்ணுகின்றோர் சில்லோர்.

அம்மனித விலங்குகளை
நீபெற்ற துண்டா?
அறமறியா நரிகளையும்
நீ பெற்ற துண்டா?
செம்மைநிலை அறியாத
குள்ளர்களும் உன்றன்
திருவயிற்றிற் பிறந்தார்கள்
என்பது மெய்யானால்

அம்மா அம்மா அம்மா
திருத்தி அருள் செய்வாய்!
அல்லர்எனில் அடியோடு
வேர்கல்லிப் போடு!
பொய்ம்மானை மெய்என்ற
இராமனைப் போல் நீயும்
புல்லர்களை நம்பாதே
நல்லபடி வாழ்க!

## தமிழ் தமிழன் உயிர்

மொழிப்பற்று மிக்குடையான் மொழிப்போர் வீரன்
மொழிவெறியன் அவன்அல்லன்! மொழியைக்கொல்லும்

கழிவுடையே மொழி வெறியன் என்று சொல்க.
கண்திறக்கும் முன்னமே வாய்திறந்து
குழந்தை அழும் அதுதான் தாய்மொழி என்பார்கள்.
கூண்டறையிற் கிடந்தாலும் தமிழ்க்குழந்தை
எழுப்பும் ஒலி தாய்மொழியாம் தமிழே! அன்றி
இங்கிலீ சிற்பேசல் எங்கும் இல்லை.

தமிழனொடு தமிழ் பிறக்கும், தமிழினோடு
தமிழ்மகன் தோன்றிடுவான்; தமிழும் சேயும்
இமைப்போது பிரிந்தாலும் வாழ்வ தில்லை
இதனாற்றான் மொழி ஒருவன் உயிர் என்றார்கள்.
நமக்கெதிரே பன்மொழிகள் காணுகின்றோம்.
நன்றவற்றைக் கொண்டவரைக் காணுகின்றோம்.
தமக்குரிய மொழி நீங்கி வாழ்வார் யாவர்?
தம்முயிரைத் தாமிழந்து வாழ்வார் உண்டோ?

படையெடுப்பால், பகையாளர் நுழைவால், தீங்கு
பட்டதனால் இன்றுவரை உரிமை அற்று
நடைமெலிந்து கிடக்கின்ற தமிழன்னைக்கு
நற்றொண்டு செய்பவரே நாட்டின் தொண்டர்.
அடிமை எனும் சேற்றினிலே ஆடி ஆடி
அழகிழந்த உள்ளத்தால் ஆங்கிலத்தைத்
தொடைதட்டித் தாய்மொழியாய்ச் செய்வார், கெட்ட
குறையினைப் பொதிகையிலே வாழச் செய்வார்.

புதுப்பொருள்கள் தோன்றின; அப்பொருள்கட்கெல்லாம்
புதுப் பெயர்கள் தமிழினிலே சேர்க்க வேண்டும்
இதையறியார் வேறுமொழி கிடைக்கு மட்டும்
இத்தமிழே இருக்கட்டும் என்று சொன்னார்
மதுரையினும் நல்லநகர் கிடைக்கு மட்டும்
மதுரையே இருக்கட்டும் என்று சொன்னால்
மதுரையிலே வாழ்கின்ற நாயும் வேறு
மாநகர்க்கும் குடிபோக ஒப்பா தன்றோ?

ஆங்கிலந்தான் உலகமொழி என்று சொல்வார்;
ஆனாலும் தமிழ்மொழிநம் தாயே அன்றோ?
ஆங்கிலந்தான் உலகமொழி என்று சொல்வார்!
தமிழ் மொழியும் அந்தநிலை எய்தும் வண்ணம்
ஈங்கிருந்து பெருமுயற்சி செயலாம் அன்றோ
இது செய்வோம் என்பவர்கள் வாயை மூடித்
தூங்கலாம் அன்றோ? வாய்த் துடுக்குக் காட்டித்
துன்பத்தை விலைபேசி வாங்கல் நன்றா?

## எழுக தமிழர்!

தமிழ்மீள வேண்டும் தமிழகம் இங்கு
நமதாக வேண்டும் நமக்குச்—சுமையான

தீமை அகன்று திருஓங்க வேண்டும்நம்
சீமை சிறக்கவேண்டும்.

தமிழ்மொழியைக் கொன்றால் தமிழரைக் கொல்ல
அமையும் என எண்ணும் அயலார்—உமியால்
இகழ் பெறுதல் வேண்டும். இன்பத் தமிழே
புகழ்பெறுதல் வேண்டும் புறத்து.

ஆங்கிலமே தாய்மொழி ஆவது வேண்டுமெனும்
தீங்கில் சிறந்த சிறுமதியோர்—ஈங்குத்
திருத்துதல் வேண்டும். செய்த செயற்கு
வருந்துதல் வேண்டும் மனம்.

இந்தி புகுத்துகின்ற எத்தர்க்கும் ஒத்தூதும்
மந்திக்கும் வேண்டும் வருமானம்—தொந்திக்கு
நாட்டுக் கறிஒன்றே நாம்வெல்வோம் நம்மில்
கூட்டுக் கறிஒன்றே கொண்டு.

வாய்திறக்கும் தீயமலைப்பாம்பை நாம்கொல்லத்
தூய்தற்ற துப்பாக்கி ஏன்? குண்டேன்? தேயத்தில்
மற்றுமை வேண்டுவது வாய்மைத் தமிழரே
ஒற்றுமை ஒன்றே ஒன்றே.

சாப்பிடுதல் தூங்கிடுதல் தாரத்தை நேரத்தில்
கூப்பிடுதல் என்ற குறுகிய—வாய்ப்பில்
மகிழ்ச்சிஎங்கே? செந்தமிழர் மானமெங்கே? பண்டைப்
புகழ்ச்சி எங்கே எண்ணும் பொழுது!

## தமிழன்

அன்னை, தந்தை, அன்பு, மொழி இவை
உன்னைப் படைத்தன, கடவுள் அன்று;
கடவுள், கடவுள் என்பர்; அஃது
அன்பெனும் பொருளுக் கமைந்த ஒரு பெயர்!

"தமிழன் நான்" தோன்றியது சாற்றுக என்பையேல்,
அன்னை, தந்தை, அன்பு, தமிழ் எனும்
நான்கும் உன்னை நல்கின என்க,
அன்னையும், தந்தையும், அன்பும், ஆரியமும்

ஆகிய நான்கினால் ஆரியன் தோன்றினான்.
அன்னை, தந்தை, அன்பு, பிரஞ்சு
நான்கினால் பிரஞ்சுக் காரன் நண்ணினான்;
பிறமொழி மாந்தரும் இவ்வாறு பிறந்தனர்.

எனினும், தமிழன் என்பவ னுக்கும்,
பிறமொழி பேசும் மற்ற வர்க்கும்
வேறுபாடு விளம்பு கின்றேன்;—
நீண்ட காலமாய் நிலவுல கத்தில்
மாண்ட ஆரியம் வாழ்வ தென்பர்.

நிலத்தினில் பிறவும் நெடுங்காலத்தின் முன்
உண்டா யினஎன உரைத்தல்கூடும்!
ஆங்கிலம் ஆதிகாலம் தொடங்கி
வாழ்வதென்றே வரைதல் கூடும்!
தமிழோ காலம் உண்டான காலமாய்
இருந்து வருவதால் தமிழன்
இருப்பவர் எவர்க்கும் முன்தோன்றியவனே!

## ஆரிய மறைக்கு முன்னவை
## தமிழ் நான்மறை

நிறைதமிழ் மக்களே! குறைவறு பன்மொழி
மறைமலை அடிகளார் அறைவது கேளீர்
இரண்டா யிரத்துநா னூறாண் டிறுதியில்

இருந்த இன்னருட் கௌதம சாக்கியன்
ஆரிய மறைகள் மூன்றென அறைதலால்
நான்மறை என்பவை தமிழ்நான் மறையே.

பழைய செந்தமிழ்ப் பாட்டுகளிலும்.
இடைக்கா லத்தில் எழுந்தவை ஆன
திருவா சகத்திலும், திருமந் திரத்திலும்,
தேவா ரத்திலும், செப்பி யுள்ளவை
ஆரிய மறையன்று; தமிழ்நான் மறையே.

ஆரிய மறைகள் என்பன அனைத்தும்
சிறுதெய் வங்களின் வணக்கம் செறிந்தவை.
அறம்பொருள் இன்பம் வீடெனும் நான்கின்
திறத்திற் சேர்ப்பவை தமிழ்நான் மறைகளே.

## முடியாதது

மலையை மடுவே ஆக்கவும் முடியும்;
அலைகடல் அனைத்தும் தூர்த்தலும் முடியும்:
விண்ணில் விரைந்து பறக்கவும் முடியும்!
மண்ணில் மழைபெய் விக்கவும் முடியும்;

சேய்மையை அணிமையாய்ச் செய்யவும் முடியும்;
மாய்வதை மாயாமற் செய்யவும் முடியும்;
தமிழி னின்று தமிழனை இமைப்போது பிரிப்பதும்
முடியா-தெவர்க்குமே.

## மதத் தலைவர் அனைவரும்
## மாத்தமிழின் பகைவரே

சைவ காக்கும்ம டத்தாண் டி—அவன்
தமிழின் சீரைக் கெடுத்தாண் டி—அந்தச்
சைவம் தொலைவ தெந்நாளே?—நல்ல
தமிழர் வாழ்வ தெந்நாளே?

வைணவந்தானும் அப்படித்தான்;—அந்த
மதத்தலைவனும் அப்படித்தான்
வைணவம் தொலைவ தெந்நாளோ—தமிழ்
மக்கள் வாழ்வ தெந்நாளோ ?

ஏசு மதமும் தமிழர்களைத்—தம்
இன்பத் தமிழை எதிர்க்க வைக்கும்—அந்த
ஏசுமதம் தீர்வ தெந்நாளே?—தமிழ்
இனத்தார் வாழ்வ தெந்நாளோ?

எல்லா மதங்களும் நம்தமிழ்க்கே—மிக
எதிர்ப்புடையன என் மானே
பொல்லா மதங்கள் தொலைவ தெந்நாள்—தமிழ்
பொலிவ தெந்நாள் செந்தேனே?

மயிலத் தாண் டி. கையெழுத்தை—ஒரு
வடவெழுத்தாலே போடுகின் றான்
செயலில் தருமைப் பண்டாரம்—தமிழ்த்
திருவை வேண்டாம் என்கின் றான்,

பசுத்தோல் போர்த்தபுலி போலே—உள்ள
பண்டாரப் பசங்களின் தோலே
பசையடங்குதல் எந்நாளோ—நம்
பைந்தமிழ் வாழ்வதும் எந்நாளோ?

## பாட்டும் பாவையும்

இசை அமுதிலே என்—உயிர்க்கிளி
இன்பம் கொள்ளுதே—அக்கக்கா
என்று விள்ளுதே !

வசை இல்லை! வம்பில்லை இல்லை சிறிதும் கலகம்—உன்
வாழ்வில் ஒரு பேரின்பம் வற்றாதே இசை உலகம்!
(இசை)

ஏழை நெஞ்சே வாழவைக்கும் இன்பத் தமிழ்ப்பாட்டு—நீ
ஏழை உடைய பண்ணை எல்லாம் யாழில் வைத்து
நன் றாய் மீட்டு. (இசை)

வீரப்பாட்டு; வெற்றிப்பாட்டு மேன்மைக்
காதற் பாட்டு;—நீ
சேர சோழ பாண்டியர்கள் திருப்பாட்டில்
ஆர்வம் காட்டு! (இசை)

## தமிழைக் கெடுப்பவர் கேடு

அறியினும் வெளியில் அறைய மாட்டார்;
அவைகளை ஒழிக்கவே அறையில் முயலுவார்,

இந்தத் தமிழில் விஞ்ஞானம் இல்லை
அந்த ஆங்கிலத்தில் அதிகம் உண்டே
ஆதலால் அழியத் தக்கது தமிழாம்!

விஞ்ஞானம் பற்றி இதுவரை விளைந்த
எந்த நூலை இவரா தரித்தார்?
இத்தனை என்றும் எண்ணிய துண்டா?

நெஞ்சக் கிணற்றின் அடியில் நிறைந்த
மடமைக் கருத்தை மாய்போம் என்று
மார்பு தட்டும் மாய்பெரும் புலிகள்
தமிழில் இல்லா புதிய சொற்களை
ஏற்படுத்துவோம் என்ற துண்டா?

அணுவள வேணும்இத் துணிவு வந்ததா?
இல்லை, காரணம் வேறே இருக்கலாம்.

நாட்டுக் குழைத்த தலைவர்கள்
கேட்டுக் குழைப்பதாற் பெறுவது கெடுதியே.

## அம்மா சுட்ட தோசை

தோசை சுட்டாள் இந்நாட் டுக்குச்
சுட்டுக் கொடுத்தாள் பார்ப்பன னுக்கு
ஆசை காட்டி மோசம் செய்தாள்
அவளே தாண்டா ஆள வந்தாள்.

பூசை போட்ட பாப்பா னுக்கு
பொரிவி ளங்காய் சுட்டுத் தந்தாள்
மீசை வைத்த தமிழர் உறவை
விலக்கி வைத்தே ஆள வந்தாள்

தமிழ நாட் டைச் சென்னை என்றாள்
தாங்கோம் என்றாள் பின்னை என்றாள்

அமிழ்தம் என்றோம் வாய்தி றந்தோம்
ஐய ருக்கே அதைக்கொ டுத்தாள்!
உமிகொ டுத்தாள் தமிழ னுக்கே
உணவு தந்தாள் பார்ப்பா னுக்கே.
உமக்கு நானே அம்மா என்றாள்
ஓகோ என்றால் சும்மா என்றாள்.

நெஞ்ச மெல்லாம் பார்ப்பா னுக்கே
நெய்வே லியுமே பார்ப்பா னுக்கே
வஞ்சம் எல்லாம் தமிழ னுக்கே
வறுமை எல்லாம் தமிழனுக்கே

அஞ்சுவ தெல்லாம் பார்ப்பா னுக்கே
அலுவ லெல்லாம் பார்ப்பானுக்கே
மிஞ்ச விட்டாள் இந்தி நனைய
மெலிய வைத்தாள் தமிழ்த்தாயை.

தமிழ் மொழியை வெறுப்பதேன்
தரும புரத்துத் தம்பிரான்? செந்
தமிழ்மொழியை வெறுப்பதேன்?

## தருமபுரத்துத் தம்பிரான்
## தக்கவாறு நடந்து கொள்

தமிழ் மொழியை வெறுப்பதேன்
தரும புரத்துத் தம்பிரான்?—செந்
தமிழ் மொழியை வெறுப்பதேன்?

தமிழ் மொழி என்ன எட்டியா!-அவ்
வடமொழி வெல்லக் கட்டியா?-செந்
தமிழ்மொழியை வெறுப்பதேன்

தமிழகத்தில் தமிழ்ப் பயிர்-அது
தமிழர் கட்கெல் லாம் உயிர்
தமிழிற் சிவம் பெரிதென்றால்-அது
தலையின் இழந்த சிறுமயிர்-செந்
தமிழ்மொழியை வெறுப்பதேன்?

சிரி இருந்திட வேண்டுமாம்-தமிழ்த்
திரு ஒழிந்திட வேண்டுமாய்
குரு வென்றெண்ணிய தமிழர்கள்-இனிக்
குருக்கள் என்றிட வேண்டுமாம்-செந்
தமிழ் மொழியை வெறுப்பதேன்?

தாயும் தமிழை எதிர்த்திட்டால்-நெடி
தாழ்ந் திடாது தமிழன் வேல்!
வாய் கொழுத்த பண்டாரம்-இனி
வகையாய் நடந்திடுதல் மேல்-செந்
தமிழ்மொழியை வெறுப்பதேன்!

## புலவர் சிவபெருமான் திருவடி அடைத்தார்

தமிழகத்திற் பிறந்தும்,
தமிழெனும் அமிழ்த்து நிறை உண்டும்
அதனால் செல்வம் நிறையச் சேர்த்தும்,
உடம்பு புல்லாய்ப் புலனெலாம்
செல்லரித்து மருத்துவ மனையில் புரளும்
ஒருத்தர்க்குத் தமிழ்ப்பற்று மருந்து தேவை
அதைக் குருதியில் ஏற்றுமுன்
சிவபிரான் திருவடி நிழல் சேர்ந்தார் புலவரே.

## சிவமா பெரிது? செந்தமிழ் பெரிது!

சமையமா பெரிது தம்பி ரானே—நல்ல
தமிழேபெ ரிதுமடத் தம்பிரானே
தமிழைவெ றுப்பதென்ன தம்பி ரானே—உன்
தாயை வெறுப்ப தென்ன தம்பி ரானே?
சமையம் ஒழிந்திட்டால் தமிழர் உண்டு—நல்ல
தமிழ்ஒழிந் தால் தமிழ் இனம் உளதோ
தமிழுக்குத் தொண்டுசெய்த தம்பி ரானே—தமிழ்
தமிழனின் உயிர்!மடத் தம்பி ரானே,

சிவமா பெரியது தம்பி ரானே—நல்ல
செந்தமிழ்பெ ரிதுமடத் தம்பி ரானே
சிவமொழிந் தால்தமிழ் இன மிருக்கும்—தமிழ்
செத்தால் இனம்சாகும் தம்பி ரானே.
சிவநெறி சொல்லி இங்குத் தமிழ் நெறியை—நீ
சிறுவ தோமடத் தம்பி ரானே?
சிவத் தொண்டுமேல் அன்று தம்பி ரானே?—தமிழ்த்
திருத்தொண்டு மேல்மடத் தம்பிரானே;

கோயி லாபெரிது தம்பி ரானே—அங்குக்
கொள்ளை யா பெரிது தம்பி ரானே?
கோயிலினும் பெரிது தம்பி ரானே—தமிழ்க்
கொள்கையன் றோமடத் தம்பி ரானே
தாயிற் பெரியதொன் று தம்பிரானே—அது
தமிழல்ல வோமடத் தம்பிரானே?
தேயத் தமிழ்வெறுத்துத் தம்பி ரானே?—தமிழ்
நிலத்தில் வாழ்லதென்ன தம்பி ரானே?

## தமிழன்னை

உளங்குளிர் தமிழ்மாலை ஒளிகொள் இன்னிசைச் சோலை
அளவின்றிக் கொடுத்ததே அன்னையின் முலைப்பாலை.
(உளங்குளிர்)

ஏழிசைத் தாலாட்டி இலக்கியச் சோறூட்டி
வாழிய வாழியென்று வளர்த்தனள் உணர்வூட்டி. (உளங்குளிர்)

திருக்குறள் நூலோடு சிறப்புறுசங்க ஏடு
விருப்புடன் கருத்துடன் விளைத்திட்டாள் அன்போடு.
(உளங்குளிர்)

பண்புகளுக்கோர் எல்லை பைந்தமிழன் எனும் சொல்லை
மண்ணுலகில் வைக்கும் தமிழ் மணக்கும் கொமுல்லை.
(உளங்குளிர்)

## தமிழகம் மீள வேண்டும்
## ஆரிய ஆட்சி ஒழிய வேண்டும்

செந்தமிழ்ச் சொற்களை இந்தியால் எழுதுதல்
அறிவிலாச் செயல்? அறமிலாச் செயல்!
வடவரின் இந்த மடமை எண்ணத்தை
முளையிலே கிள்ளி எறிதல் நம் முதற்கடன்.
ஏனெனில்,

எழுத்தைக் கொல்வது மொழியைக் கொல்வதே
மொழியைக் கொல்வது இலக்கியம் கொல்வதே;
இனத்தைக் கொல்வதெதற்கெனில், தமிழர்
நிலத்தைச் சுரண்டித் தமது நிலையினை
உயர்த்த, வடவரின் உள்ளம் இதுதான்.

நேருவின் ஆட்சி நெடுநாளாக
செந்தமிழர்க்குச் செய்யும் தீமைகள்
இம்மியேனும் குறைந்தபாடில்லை.
நேருவின் ஆட்சி மாற வேண்டும்
ஓழிக்க வேண்டும் உயர் தமிழ் மக்கள்
இந்தியை எத்துப் பேசிப் புகுத்தியது!

சாதி ஒழிப்பாரைச் சாகடித்தது!
பாரோர் அறியப் பார்ப்பனர் ஆட்சியை
நிறுவிற்றுத் தமிழரைக் கறுவிற்றுக் கொல்லதயே!
எந்தத் துறையிலும் இம்மி அளவும்
உரிமை தாரேன் ஏன உருமிற்றுப் பன்றி
தமிழர் செல்வத்தைத் தயங்காது சுரண்டிற்று.

எங்குள தமிழ் இனத்தார் தம்மையும்
கயமை மனத்தாற் காட்டிக் கொடுத்தது,
தமிழர் நன்செய் தரு நெல்லை எல்லாம்
அயலார்க் கென்றது; பசி உமக்கென்றது!

நம் இனத்தார் செம்மைத் தமிழர்கள்
இலங்கை அரசினால் எய்தும் இன்னலை
ஆதரித்தது நேருவின் ஆட்சி!

மலையத் தமிழர்கள் நிலைமை நன்றெனில்
நெஞ்சு கொதித்தது நேருவின் ஆட்சி.
அங்குள தமிழர் தொல்லை அடைந்திடில்
ஆம்ஆம் என்ற தறமிலான் ஆட்சி!

தமிழை அழிக்கத் தமிழனைத் தேடிச்
காசு தந்து அலுவல் காட்டி
ஊக்கம் செய்த துயர்விலான் ஆட்சி.

"ஆகாஷ் வாணி"—அதனை நீக்குக!
"வானொலி"—ஆக்குக! என்று கெஞ்சினும்
இதற்கும் மறுப்பா எங்கே அடுக்கும்?
தமிழன் உயிரையா தருதல் வேண்டும்
இந்த உரிமை எய்து தற்கு?

ஆரியர் ஆட்சி நீங்க வேண்டும்
ஒழித்துக் கட்ட வேண்டும்
விழுப்பத் தமிழகம் மீட்சி பெறவே!

## கோயிலில் தமிழில்லை

(தமிழன் தமிழகக் கோயிற் கடவுளுக்கு அருச்சனை செய்விக்கச் செல்லுகின்றான். கருவறைக்கு இப்புறமே நிற்கின்றான். அருச்சகன் அருச்சனைக்குக் கூலி கேட்கின்றான். தமிழ்ப் பெரியார் ஒருவர் குறுக்கிட்டுத் தமிழனுக்கு அறிவுறுத்துகிறார்.)

பெரியார் :

சிவனாரை வழிபடத் திருக்கோயி லிற்புகுந்தாய்
இவர் வழிமறித்து நில்லென்றான் நில்லென்றான்.

தமிழன் :

இவனே கருவறைக்குள் இருக்கத் தகுந்தவனாம்
எட்டி இருந்துசேதி சொல்லென்றான் சொல்லென்றான்.

பெரியார் :

கருவறைக்குள் இவன்தான் கால்வைக்க வேண்டும்
என்றால் சரியான காரணமும் வேண்டுமே வேண்டுமே!

தமிழன் :

சுரர்களில் பூசுரனாம் நாமெல்லாம் சூத்திரராம்
சூத்திரன் தாழ்ந்தவனாம் யாண்டுமே யாண்டுமே.

பெரியார் :

தேவனும் இவனானால் தேவருல கிருக்கப்
பூவுல கைச் சுரண்டல் ஆகுமா? ஆகுமா?

தமிழன் :

பூவுல கைக்காக்கப் புறப்பட்ட பேர்வழிகள்
சுரண்டாவிட்டால் பொழுது போகுமா? போகுமா?

பெரியார் :

அப்பனிடம் பிள்ளைகள் அணுகாமல் குறுக்கிட்டுச்
சிப்பாய் போல் ஏனிவனிடம் நின்றனன்? நின்றனன்?

தமிழன் :

அப்பனுக் கருச்சனை அவன் தானே செய்யவேண்டும்
அதற்குத்தான் பணம் வேண்டும் என்றனன் என்றனன்.

பெரியார் :

அரிப்புடை யவள் தானே சொரிந்து கொள்ளுதல் வேண்டும்
அருச்சனை நீ புரிந்தால் தீமையா? தீமையா?

தமிழன் :

அருச்சனை தமிழாலே ஐயையோ நடத்தினால்
அப்பனே கதைமுடிந்து போமையா? போமையா?

பெரியார் :

தமிழ்ஒலி யால் செவித் தகடுகிழியும் சிவம்
நமக்கெதற் காந்தம்பி இவ்விடம்? இவ்விடம்?

தமிழன் :

சமக்ருதம் செத்தும் அதன் பேரையும் சாகடித்தால்
நமக்கெல்லாம் வாழ்விடம் எவ்விடம்? எவ்விடம்?

பெரியார் :

தமிழைக் கெடுக்க வந்த வடமொழி மறைவதால்
நமக்கொரு கேடுமில்லை நல்லதே நல்லதே.

தமிழன் :

சமக்ருதம் தேவமொழி தமிழுக்கும் தாய்மொழி
தமிழைக் காத்திட வும் வல்லதே வல்லதே.

பெரியார் :

தமிழ்மொழி தனிமொழி உலகத்தின் தாய்மொழி
சமக்ருதம் கலப்பட நஞ்சப்பா! நஞ்சப்பா!
சுமந்தபொய் மூட்டையும் சும்மாடும் பறந்திடத்
தூயோர் பறக்கடித்த பஞ்சப்பா! பஞ்சப்பா!

## தமிழர்க்கே சலுகை வேண்டும்

தமிழர்க்கே சலுகை காட்ட வேண்டும்
தமிழகத்திரைப் படங்களில் நடிப்ப தற்குத்
தமிழர்க்கே சலுகை காட்டவேண்டும்

தமிழ்த் திரைப்படம் உடையவர் யாரும்
தமிழ்த் திரைப்படம் இயக்குநர் யாரும்
தமிழர்க்கே சலுகை காட்ட மறுத்தால்
தவிர்க்க முடியாதவை மறியலும் போரும்!
தமிழர்க்கே சலுகை காட்டவேண்டும்

கன்னட நடிகரைக் கன்னட நாடு
கட்டிக் காக்கட்டும் இதுதமிழ் நாடு
பொன்னான தமிழ் நடிகரை இகழ்ந்தால்
போர்! போர்! இதே எங்கள் ஏற்பாடு!
தமிழர்க்கே சலுகை காட்டவேண்டும்

தமிழ்நடிகையர் குச்சுக் காரித்தனம்
காட்டுவதில்லை அதுமட்டும் மெய்தான்.
உமிஇல்லை என்பதால் அரிசியை இகழ்வதா?
உறங்கினோம் நேற்றுவரை என்பது மெய்தான்.
தமிழர்க்கே சலுகை காட்டவேண்டும்

விழிப்புற்றது தமிழகம் தமிழர்க்குச் சலுகை
வேண்டும் இதனை மறவாமை வேண்டும்,
பழிப்புற நடக்க வேண்டாம் நடந்தால்
பார்க்கத்தான் நேரும் அயலாரை ஒருகை!
தமிழர்க்கே சலுகை காட்டவேண்டும்

## தமிழ்நாட்டின் நிலை

சிவத்தொண்டு மிக அறிந்தான்
திரு நீற்றை விட் டெறிந்தான்

இவன் தானா நாகரிகக் காரன்
இவனை ஆதரிபபவனா வீரன்

சவலைபோகும் பிள்ளை
தமிழ்காணா தொள்ளை
தவிலக் கற்கும் பிள்ளை
நலமறியா வெள்ளை

இவர்களெல்லாம் தமிழர்களின் தலைவர்
இந்த நாட்டில் ஆட்சிக்காக அலைவர்

சைவத் தாயின் சேய்கள்
தமிழைக் கெடுக்கும் நாய்கள்
செவ்வித் தாழங் காய்கள்
தீங்கு செய்யும் நோய்கள்

தெய்வமென்று பதவி பெற்ற திருடர்
செந்தமிழ்மேற் கண்ணில்லாத குருடர்

காட்டிக் கொடுப் பார்கள்
களவுக்கும் அஞ் சார்கள்
கூட்டிக் கொடுப் பார்கள்
கொடுமைக் கெல்லாம் வேர்கள்

நாட்டை நடத்தும் தலைவர்களாம் இவர்கள்
நடுத்தெருவில் இருக்கும் குட்டிச் சுவர்கள்

அணங்கு பிடிக்கும் வேடர்
அறிவு கெட்ட மூடர்
குணம் கேளா ஏடர்
கூட்டக் குடி கேடர்

பணம் பறிக்கும் இவரிடமாம் கலைகள்
பைந்தமிழ் பற்றில்லா எச்சில்

காசு தேடக் கற்றார்
கான்றுமிழப் பெற்றார்
கூசுதலே அற்றார்
கொள்கை ஏதும் பற்றார்

மீசையுள்ள தமிழ்ப்புலவர் என்பார்
மேன்மைத் தமிழ் ஈரலையும் தின்பார்

## தமிழர்க்கு வாழ்க்கைச் சுவை ஏது?

உணவு விடுதி ஒன்றில் ஓர் அறையில்
இருவர் தங்கினர். ஒருவன் தமிழன்
மற்றவன் பிரான்சு நாட்டு வாணிகன்!
கமழ்புனல் ஆடி அமிழ்துணவுண்டு
தூயுடை உடுத்துச் சாய்வு நாற்காலியிற்
சாய்ந்த தமிழன், தன்னெதிர் நடப்பதை

பாடிக் கொண்டே பார்த்திருந்தான்!
அறை வெள்ளிக்குக் காற் கோப்பையுணவு
கேட்டு, வாங்கி உண்டு, கிழிந்த
உடையுடன் பிரான்சினன் எதிரில் உள்ள
சாய்வு நாற்காலியிற் சாயத் தொடங்கினான்.

தமிழன் அவனை நோக்கிச் சாற்றினான்:
''சுவையிலா உணவையும் துய்ப்பது, பிரான்சில்
உள்ளவரிடத்திலும் உண்டோ?''

பின்னும் பிரான்சினன் பேசுகின்றனன்:
எரிச்சல் உறுவதேன் இன்தமிழ் நண்பரே
பிறந்த உம் நாட்டைப் பிறன் ஆள்கின்றான்,
வாழ்க்கையில் சுவையும் வாய்ப்பதுண்டோ?
வாழ்க்கைச் சுவையிலான் வாய்ச்சுவை யுடையனோ?
இன்று நீர் உண்டதில் என்சுவை கண்டீர்?
கமழ்புனல் ஆடினீர், அமிழ்துணவுண்டீர்,
நீர்ஓர் அடிமை என்பதை நினைந்திரோ?

என்று தமிழனை எண்ணத்தில் ஆழ்த்தினான்
கமழ்புனல் கழிபுனல், ஆனது தமிழற்கே.
அமிழ்துண வோர்க்காளம் அடைந்தான்
உமிழ்ந்தது தமிழனை அறிவுலகு சான்றே!

## குல்லாய் போட்டான் தில்லிக்காரன்

கல்வி கற்றவரே—மிகுந்த
செல்வம் பெற்றவரே—உமக்

கெல்லா மிருந் தென்னபயன்?
குல்லாய் போட்டான் தில்லிக்காரன்.

சமையத் தலைவரே—நல்ல
தமிழ்ப் புலவரே—ஊர்க்

குமுக்குச் சொல்லித் தழக்கடிப்பீர்,
அமுக்கிப் போட்டான் தில்லிக்காரன்

குமுக்கு—ஆதரவு

ஆலைக் காரரே—பெரிய
வேலைக் காரரே—நீங்கள்

மேலிருக்கும் சோலி பெற்றீர்
வாலறுத்தான் தில்லிக்காரன்.

அலுவல் காரரே—பண
வலிவுக் காரரே—நீங்கள்

மலிய உண்டு சலுகை என்றீர்
தலைக விழ்ந்தான் தில்லிக்காரன்.

ஆள வந்தவரே—கை
நீள வந்தவரே—நீங்கள்

தூளாக்குவோம் பகையை என்றீர்
ஆளாக்கினான் தில்லிக்காரன்.

நிலம் படைத்தோரே—உடல்
நிலம் படைத்தோரே—நல்ல

குலம்பு டைக்க வாழுமுங்கள்
எலும்பு டைத்தான் தில்லிக்காரன்.

குலம் புடைக்க—இனம் மேன்மைபெற

ஊர்ப்படி யாரே—நல்ல
தீர்ப்புடை யாரே—உங்கள்

மேற்ப டிக்கும் வீம்படிக்கும்
ஆப்படித்தான் தில்லிக்காரன்.

ஊர்ப்பாடியார்—ஊராரின் பிரதிநிதி.

உடைமைக் காரரே—மக்கள்
கடமைக் காரரே

படைமலிந்த குடிகள் என்பீர்
அடிமை என்றான் தில்லிக்காரன்.

## எல்லாம் ஆரியர் கரடிகள்

### பொன்னப்பன் சின்னப்பன் வினா விடை

இந்திரனார் இயற்றியதோர் ஐந்திரத்திலேயிருந்து
செந்தமிழ் பிறந்ததென்றார் பொன்னப்பா—"அது
வந்தவரின் வாய்ப்பந்தலே சின்னப்பா."

செந்தமிழும் வடமொழியால் வந்ததென்று சொல்லுகின்றார்
அந்தப் பேச்சில் மெய்யுண்டோ பொன்னப்பா? "அது
பொந்தில் நுழைந்த கரடியா சின்னப்பா?"

ஆரியர்களின் நான்மறையே ஆதியிலே கடவுள்சொன்ன
சீரிய நூல் என்று சொன்னார் பொன்னப்பா—"அது
வாரிக் குவித்த குப்பைமேடு சின்னப்பா."

ஆரியரும் தமிழரைப்போல் ஆதிமுதல் இங்கிருந்து
காரியங்கள் பார்த்தாராம் பொன்னப்பா?—"அவர்
ஊர் திருட வந்தவரே சின்னப்பா"

பச்சென்று வாழ்ந்தவராம் பழநாட்டில் நாகரிகம்
வைச்சவராம் ஆரியர்கள் பொன்னப்பா—? "அவர்
பிச்சைக்காரப் பசங்களடா சின்னப்பா."

கச்சைகட்டி ஆண்டவராம் கண்டநான்கு சாதியிலே
உச்சிக்காரர் ஆரியராம் பொன்னப்பா?—"அவர்
குச்சிக்காரி மக்களடா சின்னப்பா."

குவித்ததெல்லாம் அவர்பொருளாம் கொண்டதெல்லாம் அவர் புகழாம்
குவித்ததெல்லாம் அவர் முடியாம் பொன்னப்பா?—"அவர்
அவிழ்த்த முடிச்சு நிலைத்தவரைக்கும் சின்னப்பா."

அவிழ்த்துப்போட்டுத் தமிழ்விளக்கை ஆண்டிடுவார் தமிழகத்தை.
எவர்க்கென்ன செய்யமுடியும் பொன்னப்பா? "நம்மால்
கவிழ்த்துப்போட்டு மிதிக்க முடியும் சின்னப்பா."

தமிழரெலாம் சூத்திரராம் எவர்க்கும் உயர்ந்தவராம்
எமை எதிர்க்க முடியாதாம் பொன்னப்பா—"கல்
அமிபறக்கையில் உமிபறக்கும் சின்னப்பா."

தமக்குள்ளே ஒற்றுமையாம் தமிழரிடம் அஃதிலையாம்
எமை அசைப்பார் யாரென்றார் பொன்னப்பா?—"செந்
தமிழில் தமிழர் ஒன்றுபட்டார் சின்னப்பா"

மதத்தலைவர், உச்சிக்குடுமி, தமிழமைச்சன், தில்லிகாரன்
மதிப்பதில்லை தமிழரையே பொன்னப்பா?—"அவர்
குதிப்படங்கும் நேரம்வரும் சின்னப்பா."

அதுவடசொல் ஆதலினால் அஃதிருக்க வேண்டுமென்றார்
மதியில்லாத மடையர்சிலர் பொன்னப்பா?—அவர்
முதுகின் தோலில் ஊறல் உண்டு சின்னப்பா."

சிவம்காக்கும் தம்பிரான்கள் செந்தமிழை எதிர்க்கின்றார்
அவர் எல்லாம் திருந்துவரோ பொன்னப்பா?—குட்டிச்
சுவர் திருத்தப்போவதில்லை சின்னப்பா."

அவர்களின் ஒருதம்பிரான் அவரைத்தமிழன் போலிருந்தான்
அவன் செயலை நம்புவதோ பொன்னப்பா?—"அட
அவனின் நடை விலங்குநடை சின்னப்பா."

## அந்தம்மாவும் நானும்

தூங்கும் என்னை விழிக்க வைத்தன;
நாரணன் பாட்டும் நாய்க்குரைப்பும்!
நல்லதோர் மார்கழி நாள் அன்றே அது?

மின்விளக் கேற்றினேன் வெள்ளைத் தாளும்
இறகும் அண்டையில் இருத்தல் கண்டேன்.
என் மனக் கோயில் திறந்தேன் இனிய
பொன்முகம்புதிய தமிழகம் கண்டேன்.

அன்னை கூறினாள்: முன்னை நாளைவிட
இந்தப் பொங்கல் நான் ஏற்றம் உடையது,
கெடுதலை நீக்கி விடுதலை ஆக்கத்
நேரோட்டும் ஈரோட்டுப் பெரியவன் திறத்தை
உணரா மக்களும் உணர்ந்துபின் பற்றினர்.

போரிலோர் புதுமுறுக்குக் காணுகின்றேன்,
என்று சொன்னாள்; இலக்கியம் மாற்றினர்,
இந்தி கொணர்ந்தனர், இன வரலாற்றின்
வேரை அழிக்க வேண்டுவ செய்தனர்
இனத்தைக் காட்டிக் கொடுப்பவர், இனிய
தமிழைக் காட்டிக்கொடுப்பவர் தழைத்தனர்;
எழுச்சி தடைப்பட்டதோ என்றேன்.

தடைபட வில்லை. கவலை தழைத்ததால்
புலவர்பால் உணர்வு பூத்தது; ஒற்றுமை
காய்ந்தது; எழுச்சி கனிந்த தன்றோ!

செந்தமிழ்ப்புலவன் வெள்ளை வாரணன்
அருளிய தொல்காப்பிய ஆராய்ச்சி
அஞ்சுதல் சிறிதும் இல்லா அருள்மிகு
நெஞ்சப் படைப்பு! நாட்டுக் கன்பளிப்பு

'நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங்காலை அந்தணர்க் குரிய''

என்பது முதலிய பதினைந்து செய்யுள்
ஒல்காப் பெருப் புகழ் தொல்காப்பியத்தில்
இடைச்செருகல் என்றெடுத்துக் காட்டிய
யானைக்குக் கைமாறு வானும் போதாது.
தே போ. மீக்கள் செய்யும் தீமையில்
விளைந்த உணர்ச்சி வெள்ளப் பயன் இதே!
இதோகாண் புலவர் எழுதுகின்றார்கள்.

மற்றொன்று கேட்பாய்! கற்றும் கேட்டும்
தினத்தந்தியினால் செல்வம் சேர்த்தும்
வரும் ஒரு தமிழன் ஆதித்தன் என்பான்
பார்ப்பான் நட்புப் பட்ட காரணத்தால்
தம்மினின்றும் நீக்கினர் தமிழர்.
அதனால் அந்த ஆதித்தன் என்பான்
தமிழர் தலைவனைத் தமிழசு வேந்தனை
அடைந்தானாகி அழுதானாகிய
என் கூட்டத்திற்கு நின் அருள் வேண்டும்
என்றனன். சரிதான் என்றான் தந்தை.

தமிழர் உள்ளப்பாங்கு தன்னையும்
அன்னார் எழுச்சியின் அளவையும் காண்க
என்றாள் அன்னை. மகிழ்ச்சி எய்தினேன்.
ஆயினும் என்றன் ஐயப்பாடுகள்
அகல வில்லை அறிக்கை செய்தேன்.

'பார்ப்பனர் தமிழர் பகைவன்' என்றேன்
உண்மை என்றே அன்னை ஒப்பினாள்
"பார்ப்பானுக்குத் தமிழ் மகள் பயந்த
தியனால் நாட்டுக்கு நன்மையுண்டா?"
என்றேன் அன்னை இயம்புகின்றாள்.
பார்ப்புக்குப் பிறந்தோன் பகைவன்; அன்னோன்
தீர்ப்புக் கடங்கி திரிபவரும் தீயரே.
வள்ளுவன் திருக்குறள் ஆணை? அவர்களால்
எள்ளுமூக்கத்தனை நன்மையும் இந்நாட்டுக்கு
இல்லை இல்லை என்றாள் அன்னை

அன்னையே இன்னும்ஓர் அறிக்கை, நாட்டை
ஆளவந்தார் தமிழரே ஆயினும்
மானவந்த பார்ப்பன மக்களை
ஏறவிட்ட தென்ன வென்றேன்
வீழ்ந்துமுன் காட்டும் 'வீரகே' என்றாள்.
இதற்கிடை என்னரும் பேத்தியும் பேரனும்
தூக்கமா என்றனர், நாட்டுக்கு
ஆக்கம் நேருமுன் தூக்கமேதிங்கே.

## திராவிடம்

பாவி மொழியில் பகர்ந்த மகாவமிச
நூலில் ஒரு செய்தி நோக்குகின்றோம்—மேலாம்
தமிழ் என்ற சொல்லைத் தமிழோ என்றார்! ஏன்?
தமிழரல்லார் நாக்குத் தவறு.

தமிழ்நாட்டை ஆசிரியர் தலைமை முன்னாள்
தமிரிசி என்றுரைத்தார். தாம் ஓர்—தமிழரல்லார்!
ஆதலினால் தோழா அயலார் ஒரு சொல்லை
ஓதலினால் மாறுபடல் உண்டு

தமிழென்று சாற்றுதற்கு மச்ச புராணம்
த்ரமிளென்று சாற்றியதும் காண்க-தமிழா
படியைப் ப்ரதி என்னும் பச்சைவட வோரிப்
படியுரைத்தல் யார்வியப்பார் பார்.

தமிழோவும் மற்றும் தமிரிசயும் வேறு
த்ரமிளத் ரமில் எல்லாம் சாற்றின்—தமிழன்

திரிபே அவைகள்! செந்தமிழ்ச்சொல் வேர்தான்
பிரிந்ததுண்டோ இங்கவற்றில் பேசு.

திரிந்ததமிழ்ச் சொல்லும் தமிழ்ச்சொல்லே ஆற்றில்
பிரிந்தவாய்க்காலும் பிரிதோ?-தெரிந்த
பழத்தைப் பயம் பளம் என்பார் அவைதாம்
தழைந்த தமிழ்ச்சொற்கள் தாம்.

உரைத்த இவை கொண்டே உணர்க தமிழம்
திராவிடம்என் றேதிரிந்த தென்று!-திராவிடம்
ஆரியர்வாய் பட்டுத் திரிந்தாலும் அந்தச்சொல்
ஆரியச்சொல் ஆமோ அறி.

தென்குமரிப் பஃறுளியும் சேர்வடக்கு மாமலையும்
நன் னெல்லை கொண்ட நடுவிடத்தில்-மன்னும்
பொருள்கள் பலவாம்! பொலிந்தனவே அந்தப்
பொருள்கள் தமிழ்ப்பெயரே பூண்டு.

"திராவிடம்" தன்னந் தனியா ரியமா?
"திராவிடம்" இன்பத் தமிழின்-திரிபன்றோ?
இன்பத் தமிழகத்துக் கிட்டார் திராவிடப்பேர்
என்பார் சொல் ஏற்புடையதன்று,

## அழியாப் புகழ்

அழியா திருப்பது புகழொன்றே ஆகும்-பிற
அனைத்தும் மறைந்து போகும். (அழியா)

வழியே ஏகுக வழியே மீளுக
பழிதே டாதே அருமைக் குழந்தாய்! (அழியா)

மொழி என்றால் உயிரின் நரம்பு-நன்
முத்தமிழ் மொழியோ தமிழர் வரம்பு
மழையால் நன்செய் ஆகும் கரம்பு-நின்
வாழ்நா ளெல்லாம் வைத்துத் தமிழை விரும்பு! (அழியா)

தமிழுக்கு வரும் இடையூறு-போகச்
சாவதும் உனக்குச் செங்கரும்பின் சாறு!
சுமைசுமை யாய்வரும் தமிழர் கைம்மாறு
தொடங்கப்பா போர் தமிழ்உய்யு மாறு! (அழியா)

தமிழை இகழ்வோன் மடையன்
தமிழிற் றமிழனைக் காணான் கடையன்
அமிழ்திற் சுவைகாணான் எவ்வறி வுடையான்?
அழிப்பானை மகனே அழித்திடத் தடைஏன்? (அழியா)

புகழ் உள்ளான் சாவதே இல்லை
இகழ்உடை யானோ வாழ்வதே இல்லை!
மகனே உற்றுகேள் என்சொல்லை-எனக்கு
மகிழ்ச்சியை அதுதான் என் வாழ்வின் எல்லை! (அழியா)

## சமயக்கணக்கரும் தமிழும்

அந்தநாள் சமயக் கணக்கரை நினைக்கிறேன்
இந்த நாள் சமயச் சழக்கரைப் பார்க்கிறேன்.

வேறுபாடெத்தனை மாறுபாடெத்தனை!

கூறும் சமயக் கொள்கைகள் மாறினும்
அனைவரும் தமிழின் அருமை பெருமையைத்
தனைப்புகழ்வதினும் தமிழைப் புகழ்வதில்
மாற்றுக்குறையா மதிப்புடன் போற்றினர்
ஏற்றுக் கொள்வோர் தமிழர் ஆதலின்.

இந்நாள் சமய படங்கள் எப்படி?
ஆரிய மொழியின் அடியை வருடி
வீரியமிலாது வெம்புகின்றன.

குருக்கள் மார்எனும் கோயிற்பெருச்சாளிகள்
இருப்பிடமன்றோ எம்மவர் இருப்பிடம்!
இன்னிசை பாடிய எந்தமிழ் நால்வர்
இன்றமிழ்ப் பாட்டை எழில்படச் சுவரில்
எழுதியதன்றி தொழுதிட வைத்திலர்.
கடவுளை வணங்கக் கருதிச் செல்லுவார்
வடமொழி அருச்சனை செய்து வருகையில்
தின்பண்டத்தை வாங்கித் தின்று
தென்பொடு பார்ப்புக்குத் தண்டம் அழுது
சுவரில் எழுதிய சொல்லோவியங்களைத்
தவறியும் பார்த்துத் தமிழ்ப் பாட்டெண்ணார்.
இப்படி நடக்கிறது ஏதோ தமிழ்ப்பணி!

அறநிலையம் எனும் துறைத்தனத்தில்
மறந்தும் தமிழை மதிப்பதில்லை.
சைவ வைணவ மடங்கள், அவற்றைஆள்
சைவ வைணவ மடாதிபதிகள்

கோயில் நிலத்தால் கும்பி நிரப்பி
மூலையில் பூசாரி குடும்பத்தாருடன்
துறவிகள் ஐயகோ உறவிகள் ஆயினர்.
நிறங்கள் அவர்கள் நெஞ்சில் நிறைவதால்
சிவபோக சாரத்தில் செந்தமிழ் மறந்தனர்;
வைகுண்டபோகத்தில் வண்டமிழ் மறந்தனர்.

மற்ற சமயமோ தமிழுக்கும் அவர்க்கும்
சொற்றொடர்பில்லை. சொல்லும்வன் தமிழரே
மடங்கள் மதித்திடும் கோயில் அனைத்தையும்
பிடுங்கிட வேண்டும் அரசு, பெருந்தமிழ்க்
கல்விச்சாலைகளாக அதனை மாற்றுக.
கோயிலைக் கலையின் கூடமாய் மாற்றுக.
இதனைச் செய்யாதவரையில்
தமிழ் வாழாதே தமிழர் வாழாரே!

## தமிழன் பாட்டு

தமிழுக் காக!—என்
தாயினுக் காக!

அமையாரின் படையை என் சினத்தால் எரிப்பேன்
அவராலே நான்சாக நேரினும் சிரிப்பான். (தமிழுக்காக!)

தமிழுக்கு மகன் நான்!—ஒரு
தாழ்வையும் அறியேன்
தமை உயர்வென் பார்அவர் பகைப்பெருங் கடனாத்
தாக்கிடுவேன் அல்ல திழப்பேன் என் உடல் (தமிழுக்காக!)

அஞ்சுதல் இல்லேன்—நான்
ஆரியன் அல்லேன்.
நெஞ்சம் தமிழ் மரபின் வீரத் தொகுப்பு
நேர்போரில் காண்பேன்சிறப் பல்ல திறப்பு! (தமிழுக்காக!)

பைந்தமிழ் எல்லை—தனில்
பகைக்கிட மில்லை.

எந்நாளும் தோலாத செந்தமிழன் தோள்
எழுந்தால்நான் தூள்; அல்லது தமிழ்த்தாய் ஆள்வாள்.

## உயிர்மொழி

வீறுடைய செம்மொழி தமிழ்மொழி—உலகம்
வேரூன்றிய நாள்முதல் உயிர்மொழி!
வீறுடைய செம்மொழி...

மாறுபடும் மொழிகளைப்போல் மாறவில்லை
மங்கிவரும் மொழிகளைப்போல் மங்கவில்லை!
வேறுபடும் மொழிகளைப்போல் வேறாகவில்லை
வீழ்ந்துபடும் மொழிகளைப்போல் வீழவில்லை!
வீறுடைய செம்மொழி...

கூறுபடும் மொழிகளைப்போல் குலையவில்லை
கொஞ்சிபேசும் வழக்கற்றுக் குமையவில்லை!
சாறுபட்ட மரங்களைப்போல் சாயவில்லை
தரங்கெட்ட மனிதரைப்போல் தாழவில்லை!
வீறுடைய செம்மொழி!

## வாழ்வுயர்த்தும் மொழி!

உலகின் முதல்மொழியே—எம்
உணர்வின் முதல்மொழியாம்
கலைகளின் சீர்மொழியே—எம்
கண்ணிற் சிறந்ததுவாம்

அலகில் ஆற்றல் மொழி—என்
அன்னைத் தமிழ்மொழியாம்!

தொல்காப்பிய மொழியே—எம்
தூய நலமொழியாம்!
பல்காப்பிய மொழியே—எம்
பண்பாடுணர்த்தும் மொழி!

வெல்லும் தமிழ்மொழியே—எம்
வீரவாழ்வு மொழியாம்!

பண்ணும் இயல்கூத்தும்—இப்
பாருக்களித்த மொழி!
எண்ண உயிர்வினுக்கே—தலை
இருப்பெனும் செம்மொழியாம்

மண்விண் இருக்கும்வரை—தமிழ்
வாழ்வுயர்த்தும் மொழியாம்!

## ஆடு—பாடு

தமிழ்தமிழ் என்று நீ ஆடு—பட்
டறிவின் உணர்வெல்லாம் பாடு!
குமிழ்த்த இவ்வுலகப் பேரேடு—குறித்த
ஐந்தொகைக் கீடிணை ஏது?
தமிழ்தமிழ் என்று நீ ஆடு!

நமதுயிர் வாழ்வினோடு—உலக
நாகரிகத்தை விளக்கும் செப்பேடு
தமிழன்றி வேறெது கூறு—மக்கள்
சமம் என்ற பொதுமைப் பண்பாடு!
தமிழ்தமிழ் என்று நீ ஆடு!

தமிழுக்கு நீ செய்யும் கேடு—பெற்ற
தாய்க்குச் செய்யும் மானக்கேடு
சிமிழ்க்காதே சிந்தனைப் பீடு—நாளும்
செழிக்கட்டும் தமிழ்மறைக்காடு!
தமிழ்தமிழ் என்று நீ ஆடு!

சிறுகதை புதினத்தினோடு—பல
சிற்பச் செந்நூல் பல போடு
அறுத்த அறிவடை மேடு—என
ஆக்குக அறிவியல் ஏடு!
தமிழ் தமிழ் என்று நீ பாடு!

சட்ட நுணுக்கங்கள் தேடு—பொறி
சமைக்கும் இயல்களில் கூடு
முட்டிடும் வான் எல்லைக்கோடு—கோள்
முழுதாளும் புடவி நூலோடு
தமிழ்தமிழ் என்று நீ பாடு!

உயிரியல் பயிரியல் பாடு—நம்
உடலியல் மருந்தியல் ஏடு
தயிரினில் வெண்ணெய்போல் தேடு—நின்
தன்னறிவால் உயரும் நாடு!
தமிழ்தமிழ் என்று நீ பாடு!

## மொழியின்றேல் நாம் யார்?

விழியில்லாத வாழ்வும்
வெற்றி பெறுதல் கூடும்
வழியில்லாத ஊர்க்கும்
வரப்பைக் கடந்து சேர்வோம்.

எழில் இல்லாத பெண்ணும்
எவற்கோ மனையாய்க் கூடும்
மொழியில்லாத வாழ்வை
நினைக்க முடியாதன்றோ?

மொழியே தானே மூச்சு
மொழியே தானே உணர்வு
மொழியே தானே வாழ்வு
மொழியே தானே இன்பம்

மொழியே தானே மனிதன்
மொழியே தானே வழிகள்
மொழியே தானே உலகம்
மொழியின் மேல்நாம் யாரோ?

## வையம் அறிய செய்வீர்

தமிழ்ப்புல வோர்களே, தமிழ்ப் புலவோர்களே,
அமிழ்தைப் பாய்ச்சும் இரகசியத்தை
உங்கட் குரைப்பதில் உவகை கொள்கிறேன்
சங்க நூற் புலமை சான்றோர் தோன்றுமுன்

தோன்றிய தொல்காப் பியத்தின்—பின்னர்
தாய்மொழிப் பெயரைத் தமிழ்எனக் குறித்தல்
ஆய்வில் கிடைத்த அரும்பொருள் அறிவீர்
ஆனால், ஓர் உண்மை அறைவேன் உரத்தே.

வடமொழிக் கொருபெயர் வடமொழி நூல்களில்
இல்லவே இல்லை; என்ன வியப்பா?
சமஸ்கிருதம் எனச் சாற்றுவ தெல்லாம்
செம்மையுடன் ஒழுங்கும் பெற்றதைச் செப்பும்.

சமஸ்கிருதம் எனும்சொல் மொழியைக் குறிக்க
அமையவே இல்லையாம். அறிஞருள் அறிஞர்
நீ, கந்தசாமி 'நீயறிவாய்' என
சொன்னசொல் கன்னற் பாகாய்க் காதில்

இன்னும் ஒலித்தெனை எந்தமிழ்ச் சிறப்பாம்
இறுமாப்புக் கடலில் எக்களித் தாடச்
செய்கிற தருமைப் புலவரே!
வையம் அறிய வாய் முரசறைகவே!

## எந்நாள்?

தாய்மொழியாம் நானிலத்தில்
நானுழைத்துப் பார்த்தேன்
தலைப்பட்ட செல்வத்தின்
பயன் எண்ணப்போமோ?
தாய்மொழியாம் ஆழ்கடலில்
புலமையொடும் ஆழ்ந்தேன்
தளைபட்ட களஞ்சியத்தின்
கணக்கறியப் போமோ?

தாய்மொழியாம் விண்வெளியில்
பறந்துவந்து மீண்டேன்

தட்டுண்ட ஒளிமீன்கள்
எண்ணில்பல கோடி
தாய்மொழியாம் மண்ணகழ்ந்தேன்
நம் முன்னோர் வாழ்ந்த
தன்னிகரில் பண்பாடு
நாகரிகம் கண்டேன்.

தாய்மொழியின் இலக்கியஇ
லக்கணங்கள் கற்றேன்
தனித்தமிழின் மாட்சியினில்
ஆட்சியினில் வியந்தேன்.
தாய்மொழியாம் தமிழ்மொழியால்
வையகத்தைக் காக்கும்
தகுதியறிந் தின்புற்றேன்
நடக்கும் நாள் எந்நாள்?

## இல்லாத சிவனும் இருக்கும் தமிழும்

இல்லாத சிவன்முடியை அடியை மேனாள்
இரண்டுபேர் தேடினராம் இதுபுராணம்.
கல்லாத போக்கிதிலே ஐயமில்லை;
கடவுளுக்கு வேரில்லை கிளையும் இல்லை
எல்லோரும் உணருங்கள் எனும் கருத்து
புதைந்துளதை எண்ணுகிறேன் வியக்கின்றேன் நான்.
சொல்லார்ந்த தமிழ்மொழிக்கும் அதனின்தோற்றம்
தொல்பழமை அடிமுடியைக் கண்டாரில்லை,

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின்முன்
கையுழைப் பினாலுயர்ந்த மனிதருக்குள்
தொல்காப்பிய மனிதன் தமிழன் என்று
தொன்னிலத்தின் ஆய்வுகளால் குமரிநாட்டின்
பல்காப்பியம்போல பார் அனைத்தும்
பரந்தவனும் பரந்தமொழி தமிழே என்னும்
சொல்காப்பியத்தின் அடிமுடியைக்காணா
தொல்லியலார் அறிவியலார் திகைக்கின்றாரே.

எந்நாட்டுப் பழங்குடிக்கும் மொழிக்கும் அன்னார்
இனத்திற்கும் அடிமுடியைக் காண்பார், வெல்வார்;
முன்னாட்டின் குடிமக்கள் யார்யார் என்று
முன்னேற்றம் கண்டார்கள் என்பதெல்லாம்
பன்னாட்டின் ஆராய்ச்சியாளர்க்கெல்லாம்
பலாவன்று பழம்வாழை உரித்தல்போலாம்.
தென்னாட்டின் வரலாறும் மொழியும் வாழ்வும்
திகைக்கவைக்கும் இனத்தினன்நான் திகட்டல் உண்டோ?

## தமிழின் மேன்மை

உழைப்பாளர் மிகும் ஊர்ப்புறங்களிலோ
அழைக்கும் அழகுசூழ் வயல்வெளிகளிலோ
ஓங்கிய சிறப்பின் உயர்மலர்க்காட்டிலோ
மாங்குயில் கூவிடும் மரப் அடர் காட்டிலோ
மனித உழைப்பால் மாண்புறும் நகரிலோ
தனிமை துகுந்த வெட்டவெளியிலோ
தொழிற்சாலை மிகு தொழிற்பேட்டையிலோ
ஒழிவு நேரத் துவந்திடும் அரங்கிலோ

வீட்டிலோ, வெளியிலோ, கூட்டங்களிலோ
நாட்டில் எங்கெங்கு மக்கள் நடமாட்டம்
உள்ள இடமெல்லாம் உரையாடும் மொழி
தெள்ளத் தெளிந்த செந்தமிழ் மொழியின்
இனிமையில் தோய்ந்த எக்களிப் புணரலாம்.
அழகுக் கவிதையின் செழுமையைப் பருகலாம்
உண்மையின் உரத்த குரல்களைக் கேட்கலாம்
மல்லிகை மணம்போல் சொல்லின்பம் தரும்
மழலையை, காதலர் குதலையை அருந்தலாம்
மன ஓவியம் தரும் கனவுகள் நிறைந்த
இளைஞரின் பேச்சுக்கள் ஏந்தி உண்ணலாம்
தேன் சிட்டைப்போல் தீங்குயில் போல
வானம்பாடியின் வண்மைக் குரல்போல்
திசைதோறும் திசைதோறும் இசைபெறும் இன்தமிழ்
மொழியினை மனத்தில் வழியச் செய்குவீர்!

அந்தமிழ் மொழியினால் அகில உலகையும்
சொந்தமாக்கிடும் சுரப்புச் சுனை அது!
மனத்துள் ஊறும் மட்டிலாக் கருத்தினை
கணத்திற்குள்ளே கழறிட முடியும்
அறிவின் விழிப்பில் அகப்படும் எதனையும்
வெளிப்படுத் திடத்தகும் எளியது தமிழ்மொழி!
வைய இசையெலாம் கைக்கொண் டிசைக்கும்
பைந்தமிழ்க்குள்ளே பாரின் மொழியெலாம்
மொழிந்திட முடியும்; மொழியின் கருத்தையும்
பிழிந்த பழச்சாறாய்ப் பெற்றிட முடியும்,
வண்ணத் தொளியினை வானத் தெளிவினை
எண்ணத் தொளியாய் இயம்பும் எம்மொழி!

மலர்வனத் தழகெலாம் மலர்த்திட முடியும்
இலையின் சலனம், இடியின் குமுறல்,
அலைகளின் ஆர்ப்பொலி, ஆழியின் அமைதி,
குழந்தையின் மழலை, குமறும் கோளரி
தடைபடா அருவி தணல்மலை வெடிப்பு
தென்றலின் இன்பம் வாடையின் திணிப்பு
ஒன்பது சுவையின் ஓயாக் கூத்து

செயலின் ஊக்கம் அமைதியின் ஆக்கம்
செற்கையின் செம்மையாய் இயற்கையின் இணையாய்
அளவிலா உணர்ச்சியின் ஆற்றலுடைமை
வளமை மாட்சி வண்டமிழ்க்குண்டு
எவ்வித எண்ண ஏற்றங்களையும்
செவ்விதின் உணர்த்தும் சீர்மைக் கருத்து
கோடா கோடி கொள்கை கோட்பாடுடையர்
ஏடாய் கொடுக்கும் இனிமை வாய்ந்தது!
அறிவியல் துறைகள் அறிதொறும் அறிதொறும்
புரியும் தமிழில் பொலிந்திடச் செய்யும்
முத்தமிழ்போல முழுவுலகத்தும்
எத்திசை தேடினும் இல்லாத் தனிமொழி!
அத்தகை மொழியின் அருமை மக்களாய்
இத்தரை பிறந்ததால் இறுமாப்படைகிறோம்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
ஓதும் இவ்வுரை உவந்த ஒருமொழி.

யாவையும் இணைக்கும் எவரையும் பிணைக்கும்
தேவைக் கெல்லாம் சிந்தனையளிக்கும்
மக்கள் நெஞ்ச மடுவிலிருந்துப்
அக்கறை மிகுந்த அன்பிலிருந்தும்
எவரும் அழியா தோற்றுவாயிருந்தும்
வாழ்வன் வனங்களின் புதுமையிலிருந்தும்
இயற்கையின் உண்மைத் திண்மையிலிருந்தும்
பெருமைக் குரிய அருங்களஞ்சியமாய்
உருவெடுத்துள்ளது உயிர்நிகர் ஒண்டமிழ்!
பயில்தொறும் பயில்தொறும் பண்பாட்டின்குரல்
மனித குலத்தின் மாண்பினைக் காட்டுதே!
எண்ணிக்கையில்லாக் கால வளர்ச்சியின்
பண்ணொளியன்றோ பாங்குற்றெழுந்து
உலகமாம் நாடகந் தோய்விலா இயங்கும்
கலைமகளாகக் காண்கிறாள் தமிழ்த்தாய்!

உயிரே உயிரை உணரும்; உண்மை
உணர்ச்சி வாயில் உணர்வோன் வலித்தே
என்பதெற் கெடுத்துக் காட்டே எம்மொழி
எப்மொழிச் சிறப்பை எதற்கொப்பிடலாம்?
எம்மொழி நுகர்வை எதற்கு வமிக்கலாம்?
எம்மொழி அருமைப் பெறுமை பெறுதற்கு
அரிய அன்னையா? அப்பனா? உடன்பிறத்
துரிமையில் இணையும் ஒப்பில் உறவினரா?
வாழ வைத்திடும் தோழனா? காதலால்
சூழ் உலகத்துத் தோன்றாத் துணையா?
மயக்குறு மக்களா? மண்ணுலகத்தில்
எதைச் சொன்னாலும் அதனை ஏற்றிடேன்
ஏனெனில் எந்தமிழ் இன்பம்: என்னுடை
ஊனில் உயிரில் உலப்புறும் எதற்கும்
மேலே மேலே தாவிச் செல்வது!

எவைக்கும் மேலாய் எவைக்கும் உள்ளாய்
சுவைபட்டுயிரில் உயிர்புறு வாழ்க்கையில்
ஓங்கியும் உயர்ந்தும் பாங்குற விரிந்தும்
மேன்மைக்கெல்லாம் மேன்படும் எம்மொழி!

ஒருவனாய் உலகிற் கொப்பற்றுயர்ந்த
திருவள்ளுவன் சொல் புதையலை எடுத்தேன்.
ஒருசமு தாய ஒழுங்கொற்றுமையைப்
பெருமனத்தாலே பேரன்பதனால்
நெருங்கிப் பிணைத்தான்; வேற்றுமை நிழலை
அருகில் விடாமல் அன்னையாய்க் காத்தான்.
சங்கநூற் புலவர்கள் சாற்றிய பாட்டின்
அங்கெயும் இயற்கையின் அருமை,
எவரையும் தழுவும் இன்பத் தோழமை,
உவகையில் ஒன்றிய உறவின் இணைப்பு.
சாதி சமய மதத்தின் சழக்கு
வேதனை தராது வியப்புறு காட்சி
எல்லார்க்கும் எல்லாம் என்று மகிழ்ந்திடும்
பொல்லாங்கில்லாப் புதுச்சமுதாயம்
பூந்று மணந்து பொன்னொளி தந்தது,
காப்பியங்களின் சொல் காட்டிய நன்மொழி
மாப்பெரு மக்களின் வாழ்வெனும் மலர்வளம்
ஈடிலா வியப்பை நாடி நரம்பினில்
ஓடிடச் செய்து பாடிடும் உணர்வே!

பாரதிப் பாட்டின் சொற்களில் படிவேன்
சூரியன் ஒளிமுன் தோன்றும் சொற்களாய்
எத்தடையாயினும் அத்தடை தகர்க்கும்
முத்தமிழ் பார்வையை உள்ளத் துணர்ச்சியை
எவரையும் காக்கும் ஏற்றத்துடனே
கவர்ந்தது பொன்னொளி: கண்கள் ஒருகணம்
நானிலத்தினையே நட்பால் பிணைத்தன.
ஒளியைத் தெளிக்கும் உண்மைச் சொற்கள்-
இன்பமாய்ச் சிரித்து மன்பதை யோடெனை
வீழாப் புகழினில் வாழவைத்ததுவே

## எழுத்துத் திருத்தத்திலும் எண்ணத்திருத்தம் வேண்டும்

எழுத்துக்களைச் சீர்திருத்தும் ஆர்வலர்க்கோர்
விண்ணப்பம்: எதற்காக இந்த வேகம்?
பழுத்துக் கனிந்திட்ட மொழிக்கனிக்குப்
பழம் அழுகச் செய்வதுவா உங்கள் திட்டம்?
ஒழுக்கத்தில் ஓர் அழகு வேண்டுமாயின்

உயர்பெரியார் திருத்தத்தை ஏற்க; மேலும்
கழுத்தறுப்பு வேலைகளைச் செய்வதெல்லாம்
காளைகளைக் காயடிக்கும் செயலை ஒக்கும்·

மொழிக்குரிய உயர்கருத்தும் உலகளாவும்
முன்னேறும் அறிவியலை வளர்க்கும் எண்ணம்
விழிக்கடையின் ஓரத்தும் வாராத பேர்கள்
வெதும்புவதேன் எழுத்தினிலே சீர் திருத்தம்?
கொழித்தமொழி பிரஞ்சினிலே. ஆங்கிலத்தில்
குறியீட்டைக் காட்டுகிற மொழி சீனத்தில்
தொழில்படுமா உங்களுடை சீர் திருத்தம்
தோல்விழுங்கிச் சுளைகளை ஏன் எறிகின்றீர் நீர்,

மக்களெலாம்தாய் மொழியைக் கற்பதற்கு
மடத்தனமாய்க் கற்பிக்கும் முறையை மாற்றிச்
சிக்கலின்றித் தெளிவாக உணர்வதற்குச்
செம்மை நிலை காணாத ஆங்கிலத்தால்
தக்க ஒரு தகுதியினைப் பெற்றாய் போன்று
தமக்குள்தாம் பெரியரென எண்ணிக்கொண்டு
தக்கைகளாய்த் தலைநிமிர்ந்தே ஆடல் வேண்டாம்
தமிழ் வளர்ச்சி, இயக்குநர்கள் கையில் இல்லை,

உயிர்மெய்யைப் பிரித்தெழுதல் எளிதே என்றும்
உரைத்ததுநான் உண்மைதான்; நூறுபக்கம்
பயிர்களிடைக் களைபோல வளர்ந்திரண்டு
பங்காக வளருவதை அறிந்தேன்; அன்பீர்
பயில்கின்ற வர்க்கும் அச்சுக் கோப்பவர்க்கும்
பாங்காக வளர்கின்ற பொறியியற்கும்
செயல்பட நீர் விழைகின்றீர், எழுத்தமைப்பால்
சிந்தனைக்கு வந்ததடை செப்புவீரே?

□ □ □